මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை.
The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: DMS/CIR/2025/ Trainees ALW
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2025.10.

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை: 11/2025

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
அரச நிறுவனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக
அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்,

**செய்முறைப் பயிற்சிக்காக அரச நிறுவனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல்**

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக அரச நிறுவனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்களுக்கு செய்முறைப் பயிற்சிக்காக தினசரி கொடுப்பனவுகளை வழங்குவதற்கான பொதுவான நடைமுறைகளைச் செயற்படுத்தும் நோக்கத்துடன் இந்த சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் 2025.10.01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளியிடப்படுகின்றன.

02. இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய தொழில்பயிலுநர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகாரசபை, தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் கல்வி அமைச்சின் கீழுள்ள பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் கணினி ஆய்வுகூடங்கள், வலய கணினி வள மையங்கள், மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப மையங்கள் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப மையங்களில் கற்கைகளை நிறைவுசெய்த மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரச பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புகளைத் தொடரும் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு இளம் பட்டதாரிகள், இலங்கையில் பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரிவு 25அ இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகளைத் தொடரும் மாணவர்களுக்கும் நடைமுறை பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பங்களை அங்கீகரிக்கும் அதிகாரம் அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் மாகாண பிரதம செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

03. இந்த சுற்றறிக்கையின் விதிகளின் கீழ் பட்டதாரிகளைப் பயிற்சிக்கு சேர்க்காமல் இருக்கவும், பட்டப்படிப்பை முடித்த பிறகு பயிற்சி பெறுபவர்களை எக்காரணம் கொண்டும் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளாமல் இருக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

04. பயிற்சி பெறும் பயிலுநர்களின் எண்ணிக்கை மொத்த அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களில் அதிகபட்சம் 25 அல்லது 10% ஆக எது குறைவானதோ, அதுவாக இருத்தல் வேண்டும். அந்த வரையறையானது சேவைத் தேவைக்குப் போதுமானதாக இல்லாத பட்சத்தில், அத்தகைய அதிகப்படியான பயிலுநர்களை பொது திறைசேரியின் முன் அங்கீகாரத்தின் பின்னர் அனுமதிக்கலாம்.

05. அதன்படி, செய்முறைப் பயிற்சிபெறுவதற்கு விரும்பும் தகுதி வாய்ந்த அபேட்சகர்களின் விண்ணப்பங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கிணங்க தயாரித்து, 02 பிரதிகளில் பூர்த்தி செய்து, நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன், அதிகாரம்பெற்ற உரிய அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. தேவையான நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தால் மாத்திரமே பயிலுநர் ஒருவருக்கு ரூபா 1,000/- தினசரி கொடுப்பனவு வழங்கப்படலாம். இதற்கு மேலதிகமாக வேறு எவ்வித கொடுப்பனவோ அல்லது ஊதியமோ வழங்கப்படக்கூடாது. மேலும், இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக பொது திறைசேரியிலிருந்து மேலதிக நிதி ஒதுக்கீடு கோரப்படாமல் இருப்பதை திணைக்களத் தலைவர் உறுதி செய்தல் வேண்டும்.

07. அனைத்து செய்முறைப் பயிற்சிகளும் கட்டாயமாக 06 மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன், பாடநெறியில் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைப் பயிற்சிக் காலம் 06 மாதங்களுக்கு மேல் இருந்தால், அந்தப் பயிற்சிக் காலம் பாடநெறியின் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைப் பயிற்சிக் காலத்தை விஞ்சக்கூடாது.

08. பயிலுநர்கள் நிறுவனமொன்றில் பயிற்சிக்காக இணைக்கப்படும்போது, பயிலுநர்கள் திணைக்களத் தலைவரின் நேரடி மேற்பார்வையின் கீழ் அல்லது நிறுவனத் தலைவரால் உரிய அதிகாரமளிக்கப்பட்ட பதவியணி தரத்தைச் சேர்ந்த அதிகாரியின் கீழ் தேவையான பயிற்சியைப் பெறுதல் வேண்டும்.

09. செய்முறைப் பயிற்சி பெறும் பயிலுநர்கள் நிரந்தர அல்லது நிரந்தரமற்ற அரச ஊழியர்கள் அனுபவிக்கும் எந்தவொரு சலுகைகளுக்கும் உரிமை பெற மாட்டார்கள் என்பதை எழுத்துப்பூர்வமாக தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். மேலும், செய்முறைப் பயிற்சிக்கு எந்தவிதமான அனவல் அங்கீகாரமும் வழங்கப்படக்கூடாது.

10. பயிலுநர்களை அரச நிறுவனங்களில் இணைத்துக்கொள்ளும் போது, 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் பிரிவு 65 இன் விதிகளின்படி செய்து கொள்ள வேண்டிய ஒப்பந்தத்தைத் தவிர, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனோ அல்லது பயிலுநருடனோ வேறு எந்த ஒப்பந்தமும் செய்து கொள்ளக்கூடாது.

**ஒப்பம்/-**
**கலாநிதி ஹர்ஷன சூரியப்பெறும**
திறைசேரி மற்றும் நிதி, திட்டமிடல்
மற்றும் பொருளாதார அபிவிருத்தி
அமைச்சின் செயலாளர்

பிரதி :

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. க்காய்வாளர் நாயகம்

# செய்முறைப் பயிற்சி வழங்குவதற்கான விண்ணப்பம்

எனது இல.:- .............................................
திகதி :- .............................................

அமைச்சின் செயலாளர்/ மாகாண பிரதம செயலாளர்

**பகுதி I**

01.
01:(i) அலுவலகம் : ..........................................................................................
01:(ii) பயிற்சி வழங்கும் நிறுவன பெயர் : ..........................................................................................
01:(iii) உசாத்துணை இல. மற்றும் திகதி : ..........................................................................................

02. பயிற்சிபெற விரும்பும் பயிலுநர்களின் விவரம்:

| பயிலுநரின் பெயர் (1) | விடயம் (2) | ஆரம்ப திகதி (3) | முடிவுத் திகதி (4) | காலம் (மாதம்) (5) |
|---|---|---|---|---|
| I | | | | |
| II | | | | |
| III | | | | |
| IV | | | | |
| V | | | | |

03. மேலே குறிப்பிடப்பட்ட செய்முறைப் பயிற்சி பெறும் பயிலுநர்களுக்கு கொடுப்பனவு செலுத்துவதற்கான நிதி ஏற்பாடு உண்டு / இல்லை.

மேலே குறிப்பிடப்பட்ட பயிலுநர்களுக்கு அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு நடைமுறை பயிற்சி வழங்க நான் பரிந்துரைக்கிறேன் / பரிந்துரைக்கவில்லை. பயிற்சியின் போது ஒரு நாளைக்கு ரூபா 1,000/- (ஆயிரம் ரூபா) கொடுப்பனவு வழங்கலாம் / வழங்கமுடியாது.

திணைக்களத்
தலைவரின்
கையொப்பம்: .............................................
பெயர் : .............................................
பதவி : .............................................

**பகுதி II**

எனது இல.:- .............................................
திகதி :- .............................................

பகுதி I இல் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பயிலுநர்களுக்கு குறிப்பிடப்பட்ட ஆறு (6) மாதங்களுக்கு / ............................ வருடங்களுக்கு செய்முறைப் பயிற்சி வழங்குவதற்கு நான் அங்கீகாரம் வழங்குகிறேன் / வழங்கவில்லை. பயிற்சிபெறும் நாளொன்றுக்கு ரூபா 1,000/- (ஆயிரம் ரூபா) செலுத்துவதற்கு நான் அங்கீகாரம் வழங்குகிறேன் / வழங்கவில்லை.

..........................................................................................
அமைச்சின் செயலாளர் / மாகாண பிரதம
செயலாளர்